Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ ஆனி மீ ௩௧ உ வெள்ளிக்கிழமை (15 JULY. 1955) [இல - கரு]

## உலக வியாபகம் ஒப்பற்ற இறைநிறைவாகும் தோற்றம்

### திரோதானம் நீங்கத் திருவருள் பிரகாசிக்குந் திறன்

கடவுள் சர்வ வல்லமை உள்ளவர். அவருக்கு எதவுஞ் செய்ய இயலும். ஆனல் அவருக்கும் ஒரு காரியஞ் செய்ய முடியாமல் இருக்கிறது என்று சொன்னல் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆம், உண்மைதான. உலகம் இருக்கிறவரைக்கும் அதை விட்டு வேறும் இருந்துகொள்ள அவரால் முடிகிறதில்லை. கடவுளுக்கு இருப்பிடம் ஆலயம மட்டுமல்ல; ஆகாயம் மட்டுமல்ல; அகிலமுந்தான். அரசமாத்தடி மட்டுமல்ல அகில சராசரங்களுந்தான். நம கண்ணுக்குத் தெரிகிறதுபோல இந்த உலகம் விரிந்திருக்கிறவரைக்கும் அவர் இந்த உலகத்தை நீங்காமலே கலந்திருக்கிருர். உலகத்தில் வியாபகமாயிருக்கிருர். ஆனல் உலகம் ஒடுங்குங் காலமும் ஒன்று உண்டல்லவா, பிரளயகாலம் என்று அதற்குப் பெயர். அந்தக் காலத்திலே உலகம் என இப்போதுகாணும இந்த உருவமேயில்லை. அந்த நேரத்திலே அவர் சாமர்த்தியமாய் எல்லாவற்றையுந் தன்னுளடக்கிக்கொண்டு தம்மளவில் இருந்துவிடுகிருர். எல்லாமாக நாம் சொல்வது என்னவென்ருல், உலகம் விரிந்திருக்கிறபோது கடவுள் அத்துடன் தான் கலந்துகொண் டிருக்கிருர். உலகம் ஒடுங்குகிறபோது அதைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்கின்ருர். தோற்றத்திலாயினுஞ்சரி ஒடுக்கத்திலாயினுஞ்சரி கடவுள உலகத்தைவிட்டு வேருயிருக்கமாட்டார். அவரைப்பற்றி இங்கே ஒரு சிறு ஆராய்ச்சி செய்வோம.

நாம் காணும் இந்த உலகத்திலே எங்கும் நீக்கமில்லாமல் நிறைந்த பொருள் இன்னுமொன்றுண்டல்லவா. அது என்னவென்று நினைக்கிறீர்கள். அதுதான் பவனம. அது இல்லாத இடமேயில்லை. அது மிக இலேசான நுண்ணிய பொருள். கண்ணுக்கு மட்டுந் தெரிவதில்லை. ஆனல் அது இல்லாவிட்டால் உலகத்திலே ஒன்றுந் தங்கமுடியாது. எல்லாம அதோகதிதான். நாம் இறந்து போவோம. பிராணிகள் மரித்துவிடும. கல், இரும்பு, பொன் போன்ற மற்றப் பொருள்களின் கதி என்ன? அவைகளாவது தப்பி இருக்குமெனரு நினைக்கிறீர்கள்? எல்லாம் உக்கி கெக்கி அழிந்துபோய்விடும். நெருப்பாற்கூட எரியாது பவனம இல்லாவிட்டால். பவனம இவ்வளவு முக்கியமான பொருள. இன்றியமையாத பொருள். ஆனல் கண்ணுக்கு மட்டுந் தெரிவதில்லை. ஆகலால் இதை இல்லையென்று சொல்லுகிறோம. இல்லை, இல்லை; பவனம் உள்ள பொருள. இதே அமைவிலே, இதே இன்றியமையாமையிலே, இதே இலட்சணத்திலே இருக்கிறத இன்னுமொரு பொருள். அதுதான் கடவுள.

இன்னுமொன்று கேளுங்கள். ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பவனத்தை ஆராய்ந்திருக்கிருர்கள் அல்லவா. கண்ணுக்காணுத இந்த நுண்ணிய பொருளையும் கருத்துற ஆராய்ந்திருக்கிருர்கள் அல்லவா. அது எப்படிப்பட்ட பொருள், அதில் என்னென்னவெல்லாங் கலந்திருக்கின்றன. அதை வாழ்க்கையில் இன்னும் என்னென்ன தேவைகளுக்கெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கண்டிருக்கிருர்கள் அல்லவா விஞ்ஞானிகள். கண்ணுக்குத் தெரியாதென்று விட்டுவிட்டார்களா. இல்லை, இல்லை, இதுபோலவேதான் எங்கள் கடவுள் விஷயமும். பவன ஆராய்ச்சியிலே இறங்கினோர் விஞ்ஞானிகள். கடவுள் ஆராய்ச்சியிலே பதிந்தவர் மெய்ஞ்ஞானிகள்.

திரு. மு. கந்தையா
எழுதியது

விஞ்ஞானி வேண்டுமிடமெல்லாம் பவனத்தை ஆராய்ந்து எமக்குப் பகுத்துக் காட்டுகின்ருன். நாங்களுங் கண்டு ஆனந்திக்கிறோம்; அதிசயப்படுகின்றோம், ஒரு விஞ்ஞான (சயன்ஸ்) ஆராய்ச்சிச் சாலைக்கு நாம் போவோமா? அங்கே என்னென்ன விதமாயெல்லாம் இந்தப் பவனத்தை ஆராய்ந்து காட்டுகிருர்கள் என்று பார்ப்போம். அம்மம்ம! இந்த நுண்பொருளிலே நான்கு பகுதிகள் இருக்கின்றனவாம். ஒருபகுதி பிராணவாயு இனனொரு பகுதி கரிவாயு, மற்றொரு பகுதி சலவாயு வேறொரு பகுதி உப்புவாயு. இந்த நாலு பகுதியும ஒருங்கே சேர்ந்துதான இப்பவன வியாபகம் அமைந்திருக்கின்றது. முழுப் பவனத்திலும் 20.90 வீதம் பிராணவாயு. கரிவாயு மிகச் சிறிய பகுதி; ஆக .04 வீதம ஏனைய பகுதி மிகுதி. இந்த வகையிலே மெய்ஞ்ஞானிகள் ஆராய்ச்சியைப் பார்ப்போம். இந்த உலக வியாபகத்திலே ஒரு பகுதி கடவுள். அடுத்த ஒரு சிறுபகுதி திரோதானம். இனனொரு பகுதி மாயை. இவை யெல்லாஞ் சேர்ந்து தான் ஓரே உலகமாய் எமக்குப் புலப்படுகிறது ஒரு தோற்றம்.

இன்னுங் கேளுங்கள். முப்பவன வியாபகத்திலும் ஒரு பகுதி பிராணவாயு. அதுவே மிக இன்றியமையாதது. சிவ நாமமானது. மற்றவைகளுள் ஒன்று கொஞ்சம் தீங்கானது. அதுதான் கரிவாயு. அதைமட்டுந் தனியே விட்டால எமக்குத் தீங்கிழைக்கும். ஆனல் அதுவுந்தான் சில சிறந்த தேவைகளுக்கு தவுகின்றது. மற்றவைகளும் அப்படியே சில சிறந்த தேவைகளுக்குப் பயன்படுகின்றன. இதுபோலவே அடுத்த விஷயத்திலும். உலக வியாபகத்திலே மிகமிக முக்கியமான பகுதி கடவுள். அடுத்தது திரோதானம். ஆனல் அதுவுஞ் சிறிதளவு உபயோகப்படுகின்றது. மற்றவையும் இப்படியே.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### வரி ஏற்றம் இறக்கம்

அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் குடிவகைகளின் வரி கூடியிருக்கின்றது. உணவுப் பொருள்களில் வரி குறைந்திருக்கின்றது.

### கோவா பற்றிப் பாப்பாண்டவர் கருத்து

கோவாக் கருமம் ஓர் கத்தோலிக்க சமயக் காரியமாகப் போர்த்துக்கேய அதிகாரிகள் பிரசாரஞ் செய்து வந்தனர். அது அப்படியல்ல என்பதை இந்தியக் கத்தோலிக்க மக்கள் பலவாறு அத்தாட்சிப்பண்ணிவிட்டார்கள். பண்டித நேரு அவர்கள் பாப்பாண்டவருடன் இது பற்றிப் பேசியபொழுது இது ஓர் அரசியற் கருமமேயன்றிச் சமயக் கருமமல்ல என்று தாம் பாப்பாண்டவருக்கு எடுத்துக் காட்டியபொழுது அவர் அது அப்படியே என்று ஏற்றுவிட்டாரெனக் கூறுகிருர். பண்டித நேருவின் கருத்தே பாப்பாண்டவருடைய கருத்துமாயிருக்கின்றது.

## ஸ்ரீ சிவபாதசுந்தரனரின் சைவத் தொண்டு

——0—0——

### சைவமக்கள் மேற்கொள்ளவேண்டிய கடமைகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானுக்குப் பின் ஈழநாட்டில் சைவத்தை வளர்த்த பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளையவர்களாவர். அன்னரின் இளமைக்காலத்தில் மேல்நாட்டு நாகரீகம், ஆங்கிலக் கல்வி மோகம் என்பன அதிகரித்து இருந்தன. அதுவுமல்லாமல் மேல்நாட்டுக கிறிஸ்தவ பாதிரிமார்களின் மதமாற்றச் சூழ்ச்சிகளும் இந்த யாழ்ப்பாணத்திலே மலிந்திருந்தன. இச்செய்கைகளை அறிந்த சிவபாதசுந்தரர் இளம் வயதிலேயே மேல்நாட்டு நாகரிகங்கள்—ஆங்கில மோகம் ஆகியவற்றையெல்லாம் உதறித் தள்ளி, உற்ருர் உறவினரை நாடாது மனைவியை விரும்பாது "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாம் சமயஞ் சார்ந்து" நாவலர் வழி துலக்க முன்வந்தார்.

இதனல் இவரைப் பெரியோர்கள் சைவத்தைக் காக்கப் பிறந்த சிவனடியவன் எனக் கூறியுள்ளார்கள். இவர் தாம் கற்ற கல்வியைப் பிறருக்கும் பயன்படும்படி போதிக்க வேண்டும என விரும்பி ஆசிரியத் தொழிலை மேற்கொண்டனர். பல மாணவர்கள் விரும்பி இவரிடம் கல்வி கற்றனர். இவர் தமதூரின் கணுள்ள தமது மாமனரின் வித்தியாசாலையாகிய ஸ்ரீமத் வேலாயுதம் ஆங்கிலபாடசாலையிலும், சிறிதுகாலம் திருக்கோணமலை செஞ்ஸ்யோசெப் கல்லூரியிலும ஆசிரியராகக் கடமையாற்றினர். அக்காலம இப்பெரியாரை யாழ்ப்பாணச் சைவத் தமிழர்கள் நன்கு அறியவில்லை. கத்தோலிக்க குருமார் இவரை மேலான பேராசிரியர் என மதித்து நடந்தனர்.

அரிமர்த்தன பாண்டியராசன் மணிவாசகப் பெருமானின் கல்விநலம், ஒழுக்கம் பக்தி முதலாம் நற்குணங்களைக் கேள்விப்பட்டு மணிவாசகரை முதல் மந்திரியாக்கியது போல் இவரையும் சுளிபுரம் சைவத் திருவாளர் C. M. செல்லப்பா முதலியார் அவர்கள்வரவேற்று தமது விக்ரோறியாக் கல்லூரிக்கு சிமோல்அரைக்கு அடுத்தபடியாக இவரையே அதிபராக்கினர். இக் கல்லூரியிலும் சிலவாண்டு படிப்பித்தபின் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றித் திரும்பவும் சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றினர். அதன் பின் பரமேஸ்வரக் கல்லூரியில் விசேட பதவி வகித்து அக் கல்லூரியைத் திறமையோடு நடாத்தி இளைப்பாறினர். சேர். பொன். இராமநாதன் திருமயிலாப்பூர் செ. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை திருச்சிறுப்பள்ளி திரு. கோ. இராசகோபாலபிள்ளை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரம் இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



சைவப் பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்களின் இரண்டாம் ஆண்டு ஞாபகதினம் வருகிற ஆடி மாதம் 7-ம திகதி (23-7-55) சனிக் கிழமை நிகழுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

ஆடி 2ம், 3ம் திகதிகளாகிய திங்கள் செவ்வாய் (18, 19-7-55) சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மாவிட்டபுரம் தேர், (ஆடி அமாவாசைத்) தீர்த்தம் என்பவற்றின் பொருட்டு மூடப்பட்டிருக்குமென்று அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அதிபர்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஞூ ஆனி ௩௧ உ வெள்ளிக்கிழமை


## தேர்தல் சட்டத் திருத்தமா?

அரசியல் ஆதிக்க பீடத்தமர்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல்பற்றிய சட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு ஆராய்வது நூதனமன்று. ஆட்பலம் அளவுக்கப்பால் உள்ள நிலைமையில் இக்கட்சி எதை எண்ணுகின்றதோ அதைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிவிடுவது மிகவும் சுலபமானதொன்று. இருந்தும் தாய்மொழிகளிரண்டும் இலங்கையெங்கணும் அரசவரிசை உரிமையுடைத்தானவையென்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைப் புகுத்தமட்டும் இக்கட்சிக்கு இயலாமலிருப்பது என்னையோ? அது நிற்க இப்பொழுதுள்ள தேர்தற்சட்டங்களைத் திருத்துதல் அத்தியாவசியமென்பதை யாரும் மறக்கமாட்டார்கள். ஆனல் தேர்தல் ஒழுங்கு ஒருகட்சிக்கு மட்டும தனிப்பட்ட பொறுப்பாகமாட்டாது. ஒழுங்கினங்கள் எல்லாக் கட்சிகளுக்கும் இழுக்கையுண்டாக்குவதுபோன்று ஒழுங்கு முறைகளும் யாவருக்கும் உதவியாகவேயிருக்கும் என்று சொல்லுதல் வேண்டுமா? எனவே, ஐ. தே. க. இந்த அலுவலில் ஏனைய கட்சிகளைக் கலந்தாலோசியாது முடிவுக்கு வருவதும் பாராளுமன்றத்தில் ஆட்பலத்தனல் அம்முடிவுகளைச் சட்டமாக்க எண்ணுவதும் மக்கள் ஆட்சி முறைக்குப் பொருந்துமா என்று கேட்கின்றோம்.

இங்கிலாந்திலே தேர்தல் நடைபெறுவதற்கும் தெரிவுக்கு நிற்பதாகப் பெயர் கொடுப்பதற்கும் இடையிலேயுள்ள காலம் மிகவும் குறுகியதாயிருப்பதால் ஒழுங்கீனங்கள் தெரிவு வேண்டுகின்றோராலோ வாக்காளர்களாலோ ஆதரவாளர்களாலோ செய்யப்படமாட்டா. அன்றியும் தேர்தற் கூட்டங்கள் உணர்ச்சி வேகத்தினுற் பலப்பல தீமைகளை விளைவிக்கின்றன. கட்சி சார்பாக முன்வருவோர் இத்தகைய கூட்டங்களை வட்டாரங்களிற் பன்முறை கூடவேண்டிய அவசியம் எங்ஙனம் வருமோ யாமறியோம். கொள்கைகளையும் கொண்டு செலுத்தும் வழி வகைகளையும் வேண்டுமேயானல் முன் செய்த நாட்டுச்சேவையின் தொகுப்பையும் தாய்மொழியில இலகுவான நடையில் வெளியிட்டு வாக்காளர்களுக்கு வழங்கி விட்டாற் போதாதா? அவ்வாறின்றி அமைச்சர்கள் ஆதிக்கக்கட்சி அங்கத்தவர்கள் யானைப் பவனியிற் சென்று மானைக் காட்டி மான் பிடிப்பார் போன்று தேர்தற் கூட்டங்கள் வைப்பதனுல் வாக்காளர்கள் மனச்சான்றின் வழி தெரிவு செய்வதற்குமுடியுமா?

தேர்தல்என்றால்என்ன? வாக்குரிமை வழங்குவதின் நோக்கம் யாது? ஊர்க்குபகாரிகளை உள்ளபடி அறிவதற்கு உண்மைவழியுண்டா என்ற இவற்றையெல்லாம் மக்கள் நன்கறியும் வண்ணம் குடியியல் அரசியல் அமைப்பு விளக்கங்களை வெளியிட்டு, தெரிவு செய்யும் உரிமையுடையோரை வழிப்படுத்துவது அரசினர் கடமையன்றோ? ஆகவே தேர்தற் சட்டத் திருத்தத்தை ஐ. தே. க. ஏனைய கட்சிகளோடு கலந்துரையாடி இந்நாட்டிற்கு ஏற்ற முறையில் ஒரு திட்டத்தை உண்டாக்குவதே முறை. பாரத நாட்டிலே கையாளப்படும் தேர்தல் ஒழுங்கு முறைகளை இங்குள்ள அரசியற்றலைவர்கள் ஆராய்ந்து பொருத்தமானவற்றை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறில்லாமல் ஆட்பலத்தால் ஒரு கட்சி தேர்தற் சட்டத்தைத்திருத்துதற்கு முயலுதல் முறையாகாது.

## திருக்கேதீச்சர சங்காபிடேகம்

சென்ற வெள்ளிக்கிழமை (8-7-55) காலையில் சங்காபிடேகமும் விசேட ஆராதனைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு அன்ன தானம் செய்யப்பெற்றது. ஸ்ரீ குகானந்தவாரியார், ஸ்ரீ வடிவேல்சாமி ஸ்ரீ கே. குமாரசாமிப் புலவர் ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 17-7-55 -- 23-7-55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் உம்முடைய நண்பரும் இனத்தவர்களும் உமக்கு அதிக உதவியாயிருப்பர். செலவதிகரிக்கும், உம்முடைய கருமங்களில் அதிக எதிர்ப்பை முன்னிடுவீர். ஆனல் ஈற்றில் நீர் வெற்றிபெறுவது நிச்சயம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய சகோதர சகோதரிகள் நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்க உதவி செய்வார்கள். ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். வழக்கமான நடைமுறை வேலைகள்தான் நல்லபலனைத் தரக்கூடியதாயிருக்கும். சில அன்னியர் உமக்கு அறிமுகப்படுத்தப்படுவார்கள். அவர்களால் நீர் பின்பு நன்மையடைவீர்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இந்தவாரம் அதிகம் சண்டை தொடுப்பவராயிருப்பீர். ஆனல் உம்முடைய சாதுரிய முறைகள் நன்மை பயப்பதைக் கண்டு அதிசயப்படுவீர். பணநிலைமை நல்லதாகத் திருந்தவேண்டும். பகைவர் அழிவுக்குமிடமுண்டு.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

சிறிது காலத்துக்கு உம்முடைய தேகசுகம் தாக்குப்படக்கூடும் நீர் அதிகம் முயற்சி செய்தலைத் தவிர்க்கவும் தலையிடியும் கண்நோயும் உம்மை நிலைகுலைதற்குக் காரணங்களாயிருக்கும். பணத் துறையில ஒருவாறு குற்றமில்லாத வாரம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

செலவதிகரிக்கும் உமக்குத் தேவையான வசதிகளுமிருக்கமாட்டா. நண்பருடன் பிழை எண்ணங்களுக்கும் இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. தேகசுகம் நல்லாயிராது. வார இறுதி சில திருத்தங்களைத் தரும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பது முயற்சிகளுக்கு நல்லவாரம். நீர் இடைஞ்சல்களுக்குள்ளால் நீங்கக் கூடியதாயிருக்கும். புகழும் சமூக சித்தியும் நிச்சயம். ஆனல் பெண்ணின நண்பர்மூலம் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாக 1,2,3ம் பாதம்**

சிறிது தளப்பமான வாரம். ஒரு பக்கத்தில் சமூகத்துறையில மேலே சென்றுகொண்டிருப்பீர். மற்றப் பக்கத்தில் மனச்சமாதானமும் ஆறுதலுமிருக்கமாட்டாது. அவமானங்களுக்கும் குடும்பக் குழப்பங்களுக்குமிடமுண்டு

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.**

முதல் இருநாட்களும் செவ்வாயும் உம்மைத் தளப்பமான நிலைமையுள் விடும் பண நட்டத்துக்கும் நண்பருடன் பிழை எண்ணத்துக்குமிடமுண்டு. வாரமிகுதி உத்தியோக காரியங்களுக்கு அல்லது வியாபார காரியங்களுக்கு நல்லாயிருக்கும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

முதல்இருநாட்களும் வியாபார காரியங்களுக்கு நல்லாயிருக்கும். செவ்வாய் பிறபகலும் புதன் வியாழனும் அதிக கோபம் மூட்டும். மனச்சமாதானமிருக்க மாட்டாது. சண்டைகளைத் தவிர்க்கவும் அபாயங்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். கடைசி இரு நாட்களும் ஒருவாறு குற்றமில்லாமலிருக்கும்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

உத்தியோகத் துறையில் நல்லவாரம். தனலாபமும் நிச்சயம். ஆனல் குடும்பத்துறையில் எல்லாம் நலமாயில்லை அவமானங்கள் உம்முடைய தளப்பங்களுக்குக் காரணமாயிருக்கும் ஆனல் கருமங்கள் மிகபபழுதாகமாட்டா. கடைசி இருநாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் கருமங்களெல்லாம் நன்கு நடக்கக்காண்பீர். எதிர்ப்பு நீங்கி நீர் அதிக புகழைப்பெறுவீர். வாரஇறுதியில் அவமானங்களைத் தவிர்க்கவும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்த வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. வயிறறுக்குழப்படிகள், சுரம், அல்லது சிறு அபாயங்களுக்கிடமுண்டு. பணத்துறையில் நலவாரம் ஆனல் மிச்சமிருக்க மாட்டாது.

## அகில இலங்கை சுயபாஷா இயக்கம்

மேற்படி இயக்கத்தின் கூட்டம் வண்-நாவலர் வித்தியாசாலையில் திரு. வே. க. கந்தசாமி அவர்களின்தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தலைவர் அவர்கள் சுயமொழிகளின் உரிமைக்காக சகலவிதத்திலும் முன்னின்று உழைக்க அங்கத்தவர்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும என்று கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம் அவர்கள் பேசும்போது ஒருநாடு சுதந்திரமடைந்தால் தேசிய மொழிகளுக்கு முதலிடங் கொடுக்கவேண்டியது அதன் கடமை. ஆனல் நம ஈழநாட்டின் சுயமொழிகளுக்கு உரியமதிப்பு இன்னுங் கொடுபடவில்லை. சுயமொழி ஆசிரியர்களின் பரிதாபகரமான இன்றைய நிலையிலிருந்து நாம் இவ்வுண்மையை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாண நகரசபை நடவடிக்கைகள் சுயமொழியில் நடைபெற வேண்டும் என்று தீர்மானித்தனர். ஆனல் சில அங்கத்தவர்கள் திரும்பவும் ஆங்கிலத்தைப் படிப்படியாகப் புகுத்த முயற்சிக்கிருர்கள்.

இனிமேலாகுதல் நாட்டின் நலன் கருதி உழைக்க அவர்கள் முன்வரவேண்டும் என்று திரு. சத்தியானந்த சிவம் கூறினர்கள்.

திரு. இ. சின்னத்துரை ஆசிரியர், திரு. வை. கிருஷ்ண, திரு. சி. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர்கள்.

## திருக்கேதீச்சரத்தில ஆடியமாவாசைத் தீர்த்தோற்சவம்

ஆடி அமாவாசைப் புண்ணிய தினமாகிய நிகழும் மன்மத வருஷம் ஆடி மாதம் 3-ந் திகதி (19-7-55) செவ்வாய்க்கிழமை அதிகாலையில திருக்கேதீச்சரப் பெருமானுக்கும் கௌரிநாயகி அம்மையாருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, சுவாமி எழுந்தருளி பாலாவியில் தீர்த்த உற்சவமும் நடைபெறும். மததியானம் திருப்பணிச் சபையாரின் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் திருமடத்தல் மாகேசுர பூசை அன்னதானம முதலியனவும் நடைபெறும். அடியார்கள்சென்று தீர்த்தமாடி சுவாமி தரிசனம் பண்ணி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வார்களாக. யாத்திரீகர்களுக்கு உணவு குடிதண்ணீர, போக்கு வரத்து வசதி சுகாதார ஒழுங்குகள் ஆதியன செய்யபபட்டிருக்கின்றன என அறிகிறோம்.

## யாழ்ப்பாண மாம்பழத்துககு முதலிடம்

—0—

மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பொருட்காட்சி நிலையத்தில் யாழ்ப்பாணம் மாம்பழக் காட்சியை ஸ்ரீ சி. குமாரசுவாமி அவர்கள் திறந்து வைத்துப் பேசும்போது யாழ்ப்பாண மாம்பழம், உலகின் கிழக்குப் பகுதியில் திறமானதென்றும, பிறநாட்டுப் பழங்களையும் இங்கே பரப்ப வேணடுமென்றுங் கூறினர்.

## யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரி

காலியில் நகரசபைக் காரியாதிகாரியா யிருக்கும் ஸ்ரீ ஏ. வி. சின்னையா யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரியாய் வருகிறாராம். யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரி ஸ்ரீ கே. சண்முகம் அவருடைய இடத்துக்குப் போவார்.

நீர்கொழும்பு யாழ்ப்பாணக் காரியாதிகாரிகள் மாறுவார்களென்று முன்பு வெளிவந்த செய்தி இதனல் மறுக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்க்கையும் துறவும்

## திருவள்ளுவர் காட்டும் சிறந்த நெறி எது?

ஆடவர் தம்மால் காதலிக்கப்பட்ட மகளிரொடு கூடி வாழும் வாழ்க்கையே இல்லாழ்க்கை எனப்படும். இங்ஙனம் ஒருங்கமைந்து வாழும் ஆடவரும் மகளிரும் உலகினர்க்குத் தம்மாலியன்ற நன்றி புரிதல் வேண்டும். ஆதலினாற்றான் "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என இல்வாழ்க்கையைச் சிறப்பித்தார். 'எனப்பட்டது' என்பதற்கு என்று "சிறப்பித்துச் சொல்லப்படுவது" என உரை கூறுதல் உன்னுதற்குரியது. துறவும் அறநெறியின்பாற்படுமெனினும் அதனினும் இல்லறமே அறநெறியில் நிற்றற்குரிய சிறந்த நெறியாம் என்பதே அதன் கருத்தாகும். இயல்புடைய மூவர்க்கும் அவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தம்மாலான உதவியை கடமையைச் செய்யவேண்டும்; தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம் ஆகியவைகளை ஓம்புதல் வேண்டும்; பழிஞ்சிப் பல்லோர்க்கும் பகுத்துண்டல்வேண்டும். பழியஞ்சாது பிறர்க்குப் பகுத்துண்ணுது வாழும் வாழ்க்கை வாழ்க்கையாகாது. ஆதலின், இல்லறம் மேற்கொண்ட ஆடவரும் மகளிரும அன்பும் அறனும் இன்றியமையாதனவாகக் கொண்டு வாழ்ந்தனர், வாழவேண்டும் என்பது புலனும். இந்நிலையிலுள்ள அவர்கள், பிறரையும் உணவின்மை முதலிய காரணங்களால் தீநெறியிற் செல்லாது நன்னெறியில் நின்றொழுகுமாறு செய்தல் வேண்டும். அத்தகைய வாழ்க்கையையுடையோராற்றான் நாடு நலனடையும். அவர்கள் தத்தம் கா லுக்குரியாரையன்றிப் பிறரைக் காமுறுதலாகாது என்பது வாழ்க்கைத்துணை, பிறன்மனை விழையாமை ஆகிய இரு அதிகாரங்களினாலும் தெள்ளிதிற் புலனும்.

இங்ஙனம் ஆடவரும் மகளிரும் ஒருங்கமைந்து இல்லறம் ஆற்றவேண்டுமாதலின், அவர்கள் காமமொன்றை மாத்திரம் கருதிக் களவொழுக்கத்திலேயே காலம் கழித்தலாகாது என்பது போதரும். எனவே கற்பொழுக்கமே சிறந்தது, வேண்டற்பாலது என்பது தானே புலனும். தலைவன் தலைவியை அவள் தமர் கொடுக்கக் கரணமொடு கொண்டு வாழ்வதுதான் கற்புநெறி எனத் தொல்காப்பியர் கூறுகிறார். களவொழுக்கத்தை மேற்கொண்டவராயினும் பலரறிய மணம் புரிதல் வேண்டும் என்பதுதான் சமுதாய விதி. "கொடுப்போரின்றியும் கரணமுண்டே" என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இதனை வலியுறுத்தும். இதுவே பண்டைத் தமிழர் தம் கொள்கை. 'களவொழுக்கமே சாலச்சிறந்தது; அதுதான் தமிழர் மணநெறி" எனச் சிலர் கூறுவது பொருந்தாது. 'தலைவன் தலைவி ஆகிய இருவர்க்கும் ஒத்த அன்பு இருத்தல்வேண்டும் என்பதுதான் தமிழிலக்கணம் உணர்த்துவது' என்பதை உணர்தல்வேண்டும். "வேயெனத் திரண்டதோள்" என்னும் குறிஞ்சிக் கலியில் 'இனைய கூற இறைஞ்சுபு நிலநோக்கி, நினையுபு நெடிதொன்று நினைப்பாள் போல் மற்றங்கே ஆனமை தோழியர்க் கமர்த்த கண்ணள், மனையாங்குப் பெயர்ந்தாள் என்னறிவகப்படுத்தே" என, உள்ளப் புணர்ச்சியுற்ற தலைவன் வரைதல் வேண்டிப் பாங்கனுக் குரைத்ததாக இளம்பூரண அடிகள் கூறுவது ஓர்ந்துணரத்தக்கது (தொல் களவி 7) இதனால் மெய்யுறு புணர்ச்சியின் உள்ளப் புணர்ச்சியோடு வரைவு வேண்டுதலுண்டு என்பதும் இந்நெறி உயர்ந்ததாகக் கருதப்பட்டது என்பதும் உன்னியுணர்க. திருவள்ளுவர் திருக்குறளும் இதனையே உரைத்தல் காண்க.

"உள்ளுவன் மன்யானுரைப்ப தவர்திறமாற் கள்ளம் பிறவோ பசப்பு" எனத் தலைவி தலைவனையே நினைத்தலும் அவன் புகழையே கூறுதலும் உடையவளாதலின் மெய்யும் அவ்விரண்டன் வழி நிறைதல் வேண்டும். 'பொய்யொழுக்கம் கூடாது' எனக் கூறுதலும், "வீழப்படுவார் கெழீஇயிலர் தாம் வீழ்வார் வீழப்படாஅ ரெனின்" எனத் தலைவி கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும் தம் கணவரால் விரும்பப்படுமாறு வாழ்தல் வேண்டும்' எனக் கூறுதலும், "நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட் டிசையு மினிய செவிக்கு" எனத் தலைவி, தன்மாட்டுத் தலைவன் அன்பிலனெனினும அவர்திறம் கேட்டலே விருப்பம்' எனக் கூறுதலும், எத்தகைய துன்பம் வரினும் கணவனைப் பிரியாது அவனது நலத்தில கண்ணும கருத்துமாகவாழ்வதும்மே கற்பொழுக்கம எனப் புலப்படுகின்றன. இதனை "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் குறட் கருத்தோடு ஒப்பு நோக்குக. 'தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால் அம்மா அரிவை முயக்கு" என்பது களவொழுக்கத்தையே விரும்பும தலைவன் கூறுவதாயினும் அவ்வொருத்தியினிடமே இன்பம் நுகர விரும்புகின்றான் என்பது பெறப்படும், "உறாஅசவர் போற் சொலினும் செறுஅர்சொ லொல்லை யுணரப் படும்" எனச் சேட்படுத்தப்பட்ட தலைமகன் நினைப்பால் உலகம் களவொழுக்கத்தை விரும்பவில்லை என்பது புலனும். "நிறைபரியர் மன்னளியர் என்னது காமம் மறைபிறந்து மன்று படும்" என்னும் குறள் அறத்தொடு நிற்றல் வேண்டும் எனத் தலைவி தோழியோடு கூறுவதாகக் குறிப்பதால் களவொழுக்கம் உலகம் வேண்டாத தொன்று என்பது புலனும். 'பாங்கண்ணிற் காணகருப அறிவிலார் யாம் பட்ட தாம் படாவாறு' என்னும் குறளில், "யாம் பட்ட தாம்படாவாறு" என்பதால் களவொழுக்கத்துள் இடையூறுகள் மிகினும் மிகும் என்பதோடு களவொழுக்கத்தைத மேற்கொள்ளாத மகளிரும உளர் என்பதும் புலனும். "ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல நீராக நீளு ர்நோய்" என்னும் குறள் இதனை நன்கு வலியுறுத்தல் காண்க. 'கழியாக் காதலராயினும் சான்றோர் பழியொடு வருஉ மின்பம் வெஃகார், வரைபினவனே வான்றோய் வேற்ப...... தொன்றியல மரபின் மன்றலபரப் பெண்கோளொழுக்கம் கண்கொள நோக்கி' (அகம் 112) என நெய்தற் சாய்த்துய்த்த ஆலூர் கிழாரும், 'நேரிறை முன்கைபற்றி நுமர்தர, நாடறி நன்மணம அயர்கம் சின்னுள்" எனக் குறிஞ்சிப் பாட்டில் கபிலரும் கூறுவதனுல் களவொழுக்கம் பழிக்கப்படுவதென்பதும், நாடறிய மன்றலயர்தல் தொன்மையானதென்பதும் அந்நன்மணம புணர்ந்துவாழும வாழ்க்கையே கற்பியல, சிறந்தது என்பது புலனும். களவியல் என ஓரியல் வகுத்துரைக்கும் தொல்காப்பியனார்க்கும களவொழுக்கம் குற்றமுடையது என்பதே கருத்து என்பது, அவரே "அந்தரத் தெழுதிய எழுத்தின் மானவந்த குறறம் வழிகெட ஒழுகலும்" (தொல் கற்பு 5) எனக் குறிப்பதனால் வெள்ளிடைமலையாம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 11314

விசுவலிங்கம் தில்லைராசா உரும்பிராய் வழக்காளி

எதிர்

1 வேலுப்பிள்ளை பொன்னுத்துரையும் பெண் ராசமணியும் உரும்பிராய்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11314-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஞு ஆவணி மாதம் 13 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

யாட்ப்பாணம் கோப்பாய் வடக்கில் பெரியபுலமும் குருந்தன் என்னுங்காணி நில இல 12 வடக்கெல்லைக் காணியில் கிழக்குப் புறமாக இருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் வளிவாய்க்கால் உருத்தும் எல்லை கிழக்கு கனகரத்தினம் பெண் சொறனம்மாவின் ஆதனம்

வடக்கு இராமுப்பிள்ளை நவரத்தினமும் பெண்சரஸ்வதியின் ஆதனம்.

மேற்கு ஒழுங்கை

தெற்கு ரோட்டு.

இவை அடங்கிலும் மேற்சொன்ன கிணற்றின் தண்ணீர்ப் பங்கும், ஆடுகாலில் பங்கும், துலாவில் பங்கும், வளிவாய்க்கால் உருத்தும், வடக்கெல்லைக் காணியில் கிழக்குப் பக்க ஓரமாக.

வ. ஆ. துரையப்பா,
கொமிஷனர்,

யாழ்ப்பாணம்
5-7-55.
M. 79. 15—7 (ரூ 100)

### தேவை

காரைநகர் கருக்காலி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சைவ அறிவு ஒழுங்கங்கள் நிரம்பிய ஓர் அருச்சகர் தேவை. விரும்புவோர் 31-7-55-க்கு முன் எமக்கு விண்ணப்பங்களை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இ. நாகலிங்கம்
தர்மகர்த்தா

காரைநகர்
7—7—55. M 78 15,22

### ஆங்கில, தமிழ் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைகள்

கார்த்திகை 1955

N. P. T. A. Junior School Certificate Examinations November, 1955 (In English & Tamil)

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 25-9-55க்கு முன்பதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 1-8 55க்கு முன்பதாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

A. R. இராசநாயகம்
கௌரவ காரியதரிசி
வ. ஆ. ச. பரீட்சைக் குழு
655, கே. கே. எஸ் ரோட்டு
யாழ்ப்பாணம்
M 80 15-7

## தில்லையம்பதியில் திருத்தாண்டவமாடும் குஞ்சிதபாத நடேசரின் குன்றாப் பொலிவுடன் திகழும் கும்பாபிடேகச் சிறப்பு

திரு. செ. கோவிந்தசாமி

அகில உலக சைவ மக்களுக்கெல்லாம் தலைசிறந்த சிவஸ்தலமாய் விளங்குவது சிதம்பரமாகும். இதனைத் தில்லைப்பதியென்றும் சொல்லுவர். பாரத நாட்டில் முதல் முதற்றேன்றிய சிவஸ்தலமும் சிதம்பரமாகும். அஃதுமன்றி கோயில் என்று நாம் சொன்னுல் அதுவும் தில்லைச் சிதம்பரத்தையே குறிக்கும். ஏனைய கோயில்களையெல்லாம் பெயர், இடம் முதலியன சொல்லியே சொல்லவேண்டும்.

வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவர் நாயன்மார்கள் மூவாயிரவர்கள், குறுநில மன்னர்கள் முதலாயினேர்களும் பிற்காலத் திருந்த ஞானப்பிரகாச முனிவர் இலக்கணச் சாமியார் போன்ற யாழ்ப்பாணச் சந்நியாசிகளும கனகசபையில் ஆனந்த நடனம் புரியும் கூத்தப் பிரானை வழிபட்டுப் பரமுத்திபடைந்துள்ளார்கள். இத்தகைய தில்லைப் பெருங்கோயிலை பூலோக கைலாசம் என அழைப்பார்கள்.

சோழ மன்னர்கள் காடு வெட்டி நாடுகொண்டு கருங்கற்றிருப்பணி செய்த மகா சிவதலங்களல்லவா தமிழ்நாட்டின் பண்டைய சிறப்பையும், சைவத்தின் தொன்மையையும் இன்னும் காண்பித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தில்லைச் சிதம்பரத்திலே கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தவளவண்ணனை நினைக்குந்தோறும் உரோமஞ் சிலிர்க்கும். சைவசித்தாந்தப் பெருமுகிலாக விளங்கிய மணிவாசகர் பாலுடன் நீர் ஐக்கியமாவதுபோல நடேசபெருமானுடன் ஐக்கியப்பட்ட தனிச்சிறப்பு உள்ளுந்தொறும் ஒப்பற்ற இன்பந் தருவதாயிருக்கின்றது.

இத்தன்மையராகிய நடராசமூர்த்தியை நாம் தரிசிக்க எவ்வளவுதவம் செய்ய வேண்டும். நடராச தத்துவத்தை உணர்ந்து நாம் கருத்திற் கொண்டொழுகல் வேண்டும். பிறவிப் பெரும்பயன் அடையும்வழி இதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வியாபகம் ஒப்பற்ற இறை நிறைவாகும் தோற்றம்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

பிராணவாயுதான் ஜீவாதாரம். அதுதனித்திருக்கலாமே. அது ஏன் மற்றவைகளோடு சேர்ந்திருக்க வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாமல்லவா? தாராளமாய்க் கேட்கலாம். அதனையுங் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். ஒரு ஆராய்ச்சிச்சாலையிலே பிராணவாயு தனியே அடைபட்டிருந்தது ஒரு போத்தலில. அதை அப்படியே எடுத்து என் நாசித் துவாரத்திற் செலுத்தி விடலாமா என்று அங்கிருந்த ஆராய்ச்சியாளரிடங் கேட்டேன். சூ! சூ! அப்படிச் செய்துவிடவேண்டாம், தனியே அதைமட்டும் உள்ளே எடுப்பதற்கு உடம்பு தகுதியாயில்லை. பிராணவாயு தனியே இருக்கும்போது மிகவும் வேகம். அதனால் உடம்புக்குத் தாக்கமேற்படும். தனிநிலையிலே அது பயன்படாது. உள்ளுக்கெடுக்கும் போது எல்லாங்கலந்த பவனத்தைத்தான் எடுக்கமுடியும். அதில் தேவையான பகுதியை எடுத்துக்கொண்டு மிகுதியை வெளியே தள்ளிவிடும் பொறுப்பு உடலின் உளுறுப்புகளுக்குரியது என்று அவர் எனக்கொரு விளக்கங்கொடுத்தார். இதிலிருந்து என்ன தெரிந்துகொள்கிறீர்கள்? ஒரு பெரிய இரகசியம் இதிலிருந்து புலப்படுகிறதல்லவா ஜீவாதாரம் பிராணவாயுவே என்றாலும் அதைத் தனியே உட்கொள்ள எமக்குச் சக்தியில்லை. மற்றைவற்றுடன் கலந்தபோதுதான அது சமகருத் தகுதியாகிறது. அதனோடு கலந்து செல்லும் தேவையற்ற பகுதிகள் உடலில் தங்கினால் நமக்குக் கேடு விளையும். அதற்காகவன்றோ அவற்றை வெளியேற்றும் வித்தையும் நம் உடலில் நடந்துகொண்டிருக்கின்றது. இதற்குப் பெயர் நிச்சுவாசம். பிராணவாயுமட்டும் ஏன் தனியாக அமைந்திருக்கவில்லை? என்று இப்போது விளங்குகின்றதல்லவா! எங்கள் கடவுள் அமைவும் இப்படியேதான் இருக்கின்றது.

உலக வியாபகத்தில் ஒரு பகுதி கடவுளும் ஏனைப்பகுதிகள் வேறு சிலவும் என்று கண்டோமே. கடவுள்தான் அதில் முக்கியமான பொருள். அதனைத் தனியே கண்டுகொள்ள நம்நிலை இப்போது தகுந்ததாயில்லை. பிராணவாயுவைச் சுவாசத்துக்கேற்றதாகச் செய்வதற்கு வேறு மூன்று வாயுக்கள் கலந்திருககவில்லையா? அதுபோலவே கடவுளை எம் காட்சிக்கும் வழிபாட்டுக்கும் ஏற்றதாகச் செய்வதற்கே மற்றப் பகுதிகளும உடன் கலந்திருக்கின்றன. ஒன்று திரோதானம என்றோம். திரோதானம் என்றால் மறைப்பு. உலக வாழ்வில் துன்ப அநுபவம் தோன்றாமல், அலுப்பு ஏற்படாமல், மறைத்துக்கொண்டிருக்கிறது அது. என்ன கஷ்டப்பட்டும் வாழ்ந்தே தீரவேண்டும. நல்லாய் வாழ வேண்டும்; நீடுழி வாழவேண்டும் என்று வாழ்க்கையில் ஆசை வளர்ந்துகொண்டு வருகிறது அதன் மறைப்பினால் தான். அதுவும் நன்மைக்குத தான். ஆனால் தன்னோடுள்ள கடவுளையும எமக்குத் தோன்றாமல மறைக்கப்பார்க்கிறதே. அதுதான் அதிலுள்ள மோசம். இனி, கடவுள் என்ற இலட்சியத்தை நோக்கி நாம் தொழிற்படவேண்டும். அதற்கு எமக்கு உடம்புவேண்டும். ஜீவிய வசதிகள் வேண்டும்; இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்கள் வேண்டும் கடவுளைக் கொண்டாடக் கோயில் கட்டவேண்டும. பூசைக்கு எததனையோ பொருள்கள் வேண்டும்; இவையெல்லாம் மாயைத்தோற்றங்கள். மாயையிலிருந்தே தோன்றுகின்றன. இவற்றின் பொருட்டுத்தான் மாயை என்ற அப் பகுதியும் இருந்துகொண்டிருக்கின்றது. உலக வியாபகம எப்படிக் கடவுள் வியாபகமாய் அமைகின்றது என்று கண்டுகொண்டோமல்லவா இப்போது.

இன்னுமொரு செய்திகேட்கிறீர்களா? கேட்டாற் சந்தோஷப்படுவீர்கள்; திருப்தி அடைவீர்கள். வெட்டவெளியிலே எங்குந் தானாய் நிறைந்து கிடக்கிறது பவனம். அதனுள்ளே ஒரு பகுதியாய் மண்டிக்கிடக்கிறது பிராணவாயு. பிராணவாயு நெருப்பை எரியச்செயயும என்பது உண்மை யல்லவா! எங்கே வெட்டவெளியில் ஒரு சிறு கொள்ளியை வையுங்கள பார்ப்போம். அவ்வளவில அது மூண்டு எரிகிறதா? இல்லையே! ஏன் எரியவில்லையென்று நினைக்கிறீர்கள? அங்கே பிராணவாயுமட்டுந் தனியே இருந்திருந்தால் கட்டாயம அக்கொள்ளி பக்கென்று மூண்டு எரிந்திருக்கும். விஞ்ஞான (சயன்ஸ்)மாணவர்களைக் கேளுங்கள் சொல்லுவார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிச்சாலையில் பிராண வாயுவைத் தனியே பிரித்துப் பெரும் போத்தலில அடைத்து வைத்திருக்கிறார்கள். போத்தலை மெல்லத் திறந்து ஒரு சிறு நெருப்புக் கொள்ளியை அதன் வாயில் வைத்தவுடன் அது மூண்டு எரிந்துவிடுகிறது. வெட்ட வெளியிலே நாம் கொண்டு வந்தகொள்ளி எரிவதற்குப் பதில் அணையப் பார்க்கிறது. ஏன தெரியுமா? இங்கே கலந்திருக்கிறது அந்தக் கரியவாயு. அதன வேலை பிராணவாயுவின்வேலைக்கு எதிர்மாறானது. அதுதான் இங்கே எரியவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. அணைக்கவும் பார்க்கிறது. இங்கேயும ஒரு காரியஞ் செய்தால நெருப்புக்கொள்ளியை மூண்டு எரியச்செய்யலாம். என்னென்று கேட்கிறீர்களா? சொல்லுகின்றேன. இங்கே கலந்திருக்கிற கரிவாயுவை நாம் விலக்கிக்கொடுக்கவேண்டும. அதற்காக நாம் அந்த இடத்திலுள்ள கரிவாயு அவ்வளவையும விலக்கிக்கொள்ளுஞ் சக்தியுள்ள நெருப்புக் கொள்ளிகளையுஞ் சருகுகளையுஞ் சேர்க்கவேண்டும. வேண்டுமானால் வாயால் ஊதியுங் கொடுக்கவேண்டும். இவ்வெல்லா வகையாலும் அங்கிருந்த கரிவாயு எப்போதுவிலகுகிறதோ அப்போது கொள்ளி பக்கென்று மூண்டுவிடுகிறது. அடுப்பு மூளாவிட்டால் நம் பெண்கள் குனிந்து குனிந்து ஊதுகிறார்களே அதன் தத்துவமும் இதுதான்.

இனி, உலகவியாபகத்திலே கடவுள் ஒருபகுதியென்றோமே. அப்படியிருந்தும் அதை ஏன் நாம் காண முடிகிறதில்லை என்று கேட்பீர்களல்லவா. அதுவும் பவனத்தின் சங்கதி போலத்தான். திரோதானமாயை என்றெல்லாஞ் சொன்னோமே. அந்தத் திரோதானத்தின் தன்மை அந்தக் கரிய வாயுவின் தன்மைபோலத்தான். சுமார தன்னிலேயில் தெரியக்கூடிய கடவுளை அது மறைத்துக்கொண்டிருக்கிறது பாருங்கள். இங்கேயும ஒரு காரியஞ் செய்யலாம். செய்தாற் கடவுளை நிச்சயம காணலாம. அது என்ன காரியம் தெரியுமா? அந்தத் திரோதானத்தை விலக்கிவிடவேண்டியதுதான். கரிவாயுவை விலக்கிவிடப் பிராண வாயு தானாய் மூண்டெரிந்ததுபோலத் திரோதானததை விலக்கிவிடக் கடவுள் சுயமாய்ப் பிரகாசித்துவிடுகிறது. ஆலயங்களிலே சந்நிதானத்தில் திரையிருக்கிறது. அந்தத் திரையை விலக்கியவுடனே சோதிதெரியவில்லையா? அதேபோலத்தான் இதுவும். அந்தத் திரையும திரோதானத்தின் அறிகுறியே.

இனி, இத் திரோதானததை விலக்குவதெப்படி என்றது அடுத்தவிஷயம். அது இலகுவில் முடியும். ஆனால் எங்களால அல்ல; அதற்குரிய தகைமை பெற்றவர்களாலதான் அது முடியும். பகவான் இராமகிருஷ்ணர்போன்ற ஞானவான்கள் திருநாவுக்கரசுசுவாமிகள்போன்ற பக்திமான்கள இவர்களால் முடியும். அவர்களுக்கு இந்த வேலையில் ஒரு சிரமமும இல்லை. அவர்களைக் கண்ட மாத்திரத்தே அத்திரை தானாய் விலக்கிக் கொடுக்கின்றது. அக்குளளே தெய்வம சுயமாகவே பிரகாசித்துவிடுகின்றது. எந்தப் பொருளிலாயினுஞ் சரி இது நிகழ்ந்தேவிடுகிறது.

"ஆரியனும் ஆசான் வந்து
அருளால தோன்ற
அடிஞானம் ஆன்மாவில்
தோன்றும்" — சித்தியார்

ஆரியனும் ஆசான் -ஞானகுரு. அடிஞானம-உண்மைத் தெய்வப் பிரகாசம். எப்பொழுது ஞானகுரு தோன்றி அருள் செய்கின்றாரோ அப்பொழுதே ஆன்மாவிடத்தில் தெய்வப் பிரகாசம் ஏற்பட்டுவிடும என்பது சாஸ்திர உண்மை.

ஒரு சிறு உதாரணஞ் சொல்லுகின்றேன கேளுங்கள். திருவோத்தூரிலே ஞானியர் இருந்தார். அவர் கோயிலுக்கென்று சில பனைகளை வளர்த்தார். அவைகளுக்குக் காய்க்குஞ் சக்தி இல்லாமற்போயிற்று. எல்லாம ஆண்பனைகளாய் இருந்தன, அன்பருக்கு இதுபற்றிக் கவலையாயிருந்தது. ஒருநாள் திருஞான சம்பந்தப் பிள்ளையார அந்தப்பக்கஞ் சென்றிருந்தார். அன்பர் தம் குறையை இவ

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# இல்வாழ்க்கையும் துறவும்

3-ம் பக்கத்தொடர்ச்சி

சரணமொடு கொடுப்பக் கொண்டு வாழும் வாழ்க்கையே வேண்டப்படுவது என்பதனை "நிலையுயர் கடவுள்நின் னிணையடிதொழுதேம், பலரறி மணமவர் பெறுகுவரெனவே" 'அறுமுகவொருவ நின்னடியிணை தொழுதேம் துறைமிசை நினதிரு திருவடிதொடுநர் பெறுக நன் மணம்விடு பிழைமணம் எனவே" (சிலம்பு குன்றக் குரவை) என இளங்கோவடிகள் இயம்புதலானும் உணர்க.

இங்ஙனம் வாழ்க்கையில் ஈடுபட்ட ஆடவரும மகளிரும் நன் மக்கட் பேறு பெற்று, அன்பொடு விருந்தோம்பி, செய்ந்நன்றியறிந்து, இனியன கூறி, நடுநிலைநின்று அடக்கத்தோடு ஒழுக்கமுங்கொண்டு பொறுமையோடு அழுக்காறின்றிப் பிறர் பொருள் வெஃகாது, புறங்கூறாது, பயனில பேசிக் காலம் கழியாது தீவினையஞ்சி, ஒப்புரவொழுகி, ஈகையால் பொருளீட்டி வாழ்தல் வேண்டும். இந்நெறியில் மக்கள் வாழாராயின் நாடு நாடாகாது பாழாகும் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் புறநானூற்றுச் செய்யுள் ஈண்டு கருதற்குரியது. இசையிலாயாக்கை பொறுத்த நிலம் வசையிலா வண்பயன் குன்றும். நாட்டின் வளம் குன்றின் நாடாளும் மன்னனை மாதிரம் குறைகூறிப் பயனில்லை. நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நல்லறநெறியில் நின்றால்தான் நாட்டின் வளம் சிறக்கும்.

இங்ஙனம், அன்புநெறியில வாழ்கின்ற ஆடவரும மகளிரும அருளுடையவராகிப் புலால் மறுத்துத் தவநெறியில் உயிர்க்குறுகண் செய்யா நெறிநின்று வாழ்தல் வேண்டும். இவ்வருள் நெறியைப் பின்பற்றுவோர் படிற்றொழுக்கமின்றி, வாய்மை பேசி, வெகுளாது, பிறர்க்கின்னா செய்யாது, கொலை மேற்கொள்ளாது வாழ்தல் வேண்டும். இந்நிலை உள்ளத்தில் எழ வேண்டுமாயின் நிலையாமையை உணரவேண்டும் அப்பொழுதுதான் நம்பொருள் பிறர்க்குப் பயனபடவேண்டும் என்று கருதிப் பொருளைச் சேர்த்து வைக்காதிருக்கும் துறவுள்ளம் தோன்றும். அத்தகைய உள்ளத்திற்றான் எவ்வுயிரும் இறைவன் சந்நிதியாகும் என்ற உண்மை ஞானம் தோன்றும். அம்மெய்ஞ்ஞானம் தோன்றின் அவாவறும். அதனால் பிறப்பறும். இப்பிறப்பறும் நிலையே தவத்தின் மேனிலையாம்.

இல்லற நெறியில் நிற்பவர்கள் காமம் சான்ற கடைக்கோள் காலை துறவறம் மேற்கொண்டு வாழ்வர்; வாழ்தல் வேண்டும் என்பதே திருவள்ளுவர் கருத்தென்பது அறத்துப்பால் வைப்பு முறையினால் "வையத்துள் வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என இல்லறத்தின் பயன்கூறிப் பின்னர் துறவறமும் அதன் பயனாகிய பிறப்பறுத்தலும் கூறுவதனால் நன்கு புலனாம். வானப்பிரஸ்தம் சந்நியாசம் இரண்டும் துறவுள்ளம் படைத்தோர்க்கே யாதலின் இரண்டையும் தனித்தனியே பிரிக்காது துறவறமென்றே ஓதினார் வள்ளுவனார். "காமஞ் சான்ற கடைக்கோட் காலை' ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என்பதனால் வானப்பிரஸ்தமும், "அருளொடு புணர்ந்த அகற்சி", "காமம் நீத்த பால்" என்பதனால் சந்நியாசமும் தொல்காப்பியர் கூறுவது உன்னுதற்குரியது. எத்தொடர்பும் இல்லாது விலகுதலே துறவு (சந்நியாசம்)என்பது "இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை" என்னும் குறளால் வலியுறும். நிலையாமை யுணர்ந்து நன்னெறி நின்று பற்றற்று அருளொடு வாழ்தலே துறவறநெறியாம் என்பது முந்தையோர் கண்ட முறை. அந்நெறியில் நின்றவர்களே முனிவர்கள், அத்தகையோரால் நாட்டிற்கு நலம் உண்டு என்பது நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தால் நன்கு விளங்கும்.

— செந்தமிழ்.

## இந்து ஆலயச் சட்டம்பற்றி சேர். கந்தையா

உருத்திரபுர சிவாலய கும்பாபிடேகத்தின்போது சேர். கந்தையா வைத்தியநாதன் அங்கே பேசும் பொழுது இப்படி ஒரு சட்டம் தேவையில்லை என்பது தமது சொந்தக்கருத்தென்றும் ஆனால் காலநிலைமையின்படி தேவைப்பட்டு இந்து அங்கத்தவர்களுட் பெரும்பான்மையோர் சாதகமாக வாக்களித்தால் ஏனையோர் அதற்குச் சாதகமாக வாக்களிப்பர் என்பது உறுதியாகக் கொள்ளத் தக்கது என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்குடி சினியர் தாமோதரம்பிள்ளை
—வழக்காளி

இல. 7733

எதிராக

யாழ்ப்பாணம் செம்மாதெருகுடி கதிர்காமர் கனகசபை மகள் வாலாம்பிகை, காலஞ்சென்ற கனகசபை கைம்பெண் செல்லம்மாவின் ஆதனங்களுக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 820ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரியாக,
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7733.ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1954 ஆம் புரட்டாதி மாதம் 14ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிதாரி இறை பாக்கியன் பண்டசாலை பாதில. இ. ஏறக்குறைய 3 1/2 கிட்டங்கிக் கட்டிடமும் மெத்தைவீடும மற்றும் அதைச் சேர்ந்தவைகளும இதில் கிழக்கு [illegible] பிரிவிடப்பட்ட மேற்கரைவாசிப் பாகம் பாதில இலா ஏறக்குறைய $1\frac{3}{4}$ இந்தப் பரப்பு ஒன்றே முக்காலுககும் எல்லை கிழக்கு மாதிம் தமபிஐயா மரகாயரின் உரிமைக்காரருக்குரிய ஆதனம், வடக்கும் தெற்கும் றோடு. மேற்கு ராஜா வைத்திலிங்கம் ராமநாதபிள்ளை பெண் மீனும்பாளுகுடைய இதன்மீதி ஆதனம் இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்

யாழ்ப்பாணம்,
2-8-55.
M. 84 15-7-55. (த. 200

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொக்குவில் மேற்கு
சின்னத்தம்பி இராசா
வழக்காளி
(பரித்தியடைப்புப் பிள்ளையார்கோவிலடி.

இல. 10977

எதிராக

இணுவில் மேற்கு
நன்னித்தம்பி துரையப்பா
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10977ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆம் ஆவணி மீ 25 உ வியாழக்கிழமை பிற்பகல 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை மித்தியான் கி, பரப்பு 8 பனைகளும் எல்லை கிழக்கு சின்னட்டியான் கணபதியின் ஆசனம். வடக்கு அம்பலவி கதிரித்தமபியின் ஆதனம். மேற்கு வைத்திலிங்கம் சரவணமுத்துவுக்கும் பங்காளருக்குமுரியஆதனங்கள் தெற்குஒழுங்கை இதடங்கலும்.

இக்காணியைப்பற்றி ஏதாகுதல் விபரம் அறிய விரும்பினல் ஆனைக் கோட்டை பிறக்டர் S. திருநாவுக்கரசு அவர்களிடம் அறியலாம்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.
9—7—55.
M. 83 15—7—55

## அரசாங்கக் கேள்விப்பத்திரங்கள்

வவுனியாக் கச்சேரி

N 1943— 1955/56ம் வருடத்தில் முல்லைத்தீவ மாங்குளம், வவனியா ஆகிய இடங்களிலுள்ள சாராயத்தவறணைகளில் சாராயம் விற்பதற்குத் தத்துவம் பெறுவதற்குரியகேள்விப்பத்திரங்கள் 6-8-55ல் முறையே மு. ப. 9 30, மு ப. 10,00, மு, ப. 10,30 மணிக்கு முடிவடைகின்றன. விபரங்களுக்கு 15-7-55 அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 1ம் பாகம், 2ம் பிரிவைப் பார்க்க.

G 15 15—7

## போக்குவரத்து அறிவித்தல்

### நல்லூர் கந்தசுவாமி கோவில்

வருட மகோற்சவம் 1955

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1955-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந் திகதி தொடக்கம ஆவணி மாதம் 18 ந் திகதி வரையும் எவ்வகையான வண்டிகளும் கீழ்க் காட்டப்படும் வீதிகளால் போககுவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந் தெருவில் அரசடிச் சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்,

(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையேயுள்ள கோயிலின் வீதி.

2. சமயோசிதமாக யாற்றப்படும் தெருக்களின் விபரம்:

குறித்த காலத்திலே வண்டிகள் இரதங்களைச் செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள் மூலம் செலுத்துவர்களாக.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) போக்கு வரவு செய்வோர் நாவலர் தெருவாலும், நல்லூர் குறுக்குத் தெருவாலும் செலுத்துக.

(ஆ) அரசடித் தெருமூலம் கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) செலுத்துவோர் "உடையமன்" தெரு நாவலர் தெரு நல்லூர்க் குறுக்குத் தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக,

3 திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் இரதகள் மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும இரதங்களையும் கொண்டு போய் நிறுத்தி விடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைக்கப்படுகின்றன அவற்றைச் சாரதிகள் பயன்படுத்துவார்களாக.

(அ) அரசடித் தெரு மூலமாகக் குறித்த கோயிலுக்குச் செல்லும் வண்டிகள் இரதகள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப்படலம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயில் தெருவீதியால் வரும் வண்டிகள் இரதங்கள் கைலாய பிள்ளையார் கோவில் நிலத்தில் விடப்படலாம்.

(இ) கோப்பாய் மார்க்கமாக வரும் வண்டிகள் இரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடப்படலாம்.

(Sgd)
W. E. C. JEBANASAM
வடமாகாணப் பாடிகாவல
மேற்பார்வையாளர்

பாடிகாவலகிலயம் (Police Office)
யாழ்ப்பாணம்
15 ஆடி 1955
M, 81 15, 22-7-55.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



# ஸ்ரீ சிவபாதசுந்தரனாரின் சைவத்தொண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியோரை நண்பராகக் கொண்டவர். ம. க. வேற்பிள்ளைப் புலவர் இவருடைய மைத்துனராவர்.

சேர். பொன. இராமநாதன் செய்த தொண்டுகளுக்கும் இவரே காரண கர்த்தராக இருந்தவர் சைவவித்தியா விருத்திச் சங்கம் ஒன்று வேண்டுமென இராமநாதனுக்கு நினைவூட்டி வைத்தபெரியாரும் இவரே! இத்தகைய சிவபாதசுந்தரர் தமிழ்நாடு முழுவதற்கும் சைவத்தைப் பரப்புவதற்காக மக்களின் ஒழுக்க நெறிக்கெல்லாம் நிலைக்களனக இருந்து சைவநூல்களை ஒவ்வொன்ருக வெளியிட்டார்கள். கிறீஸ்துமத கண்டனம் செய்தார்கள்.

இவரது சைவபோதனைகள் எந்த மாணவருள்ளத்திலும்பசுமரத்தாணி அறைந்தாற்போல் பதியும். திருஞானசம்பந்த சுவாமிகள் திருவருளற்புதத்தினல் புறச் சமயச் சமணரைச் சைவசமயத்துக்குள்ளாக்கியதுபோல் இவர்களும்கிறிஸ்தவ சமயத்தில் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு சைவோபதேச மொழிகளைக் கூறியும், திருவாசகத்தைப் படிக்கக் கொடுத்தும் அவர்களைச் சைவத்துக்குள்ளாக்கினர்.

இத்தகைய பெரியார் அவர்கள் தம்வாணுள் முழுவதையும் சைவ சமயத்திற்கே செலவிட்டிருக்கிருர்கள். சிவாலயங்களுக்கெல்லாம் திருப்பணி செய்திருக்கின்ருர்கள். இவரது முக்கியமான இலட்சியம் சைவத்தமிழ் மக்கள் எல்லாரும் சித்தாந்த உணர்ச்சியும் அறிவும் படைத்தவர்களாய்த் திகழவேண்டுமென்பதே! இதற்குச் சைவப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் சைவக் கல்வி செவ்வனே போதிக்கப்படல் வேண்டும் என்பது சொல்லாமலேயமையும் இலங்கையில மாத்திரமல்லாமல் தென்னூடு வடஇந்தியா ஈறுகச் சித்தாந்தத் தேனமுதை வாரி வழங்கி மேலநாட்டிலும் பரப்ப வேண்டுமென்பதே அப்பெரியாரது அவாவாகும் அதனுல் அவர் சமயநூலகளில சிலவற்றை ஆங்கிலத்திலும் வெளியிட்டார்கள். நாவலரும் சிவபாதசுந்தரனும் செய்துவந்த தொண்டுகளை வளர்ப்பது சைவ மக்களின் கடனாகும்.

(செ. கோ.)



பழனி ஆண்டவருக்கு
அபிஷேகமான

## பஞ்சாமிர்தம்

பிரசாதங்கள் செலவு அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. 4-12 0
மற்ற விபரங்களுக்கு எழுதவும்
S. P. முத்து சுந்தரக் குருக்கள்
ஆண்டவர் கோவில பூஜை பழனி



## புதிய சமாதான நீதவான்

—0—

கோப்பாய் தெற்கு வாசியும் பலாங்கொடைப் பகுதியிற் பிரபல தோட்ட முதலாளியும ஆகிய திரு R. கந்தையா [illegible] நியமிக்கப்பெற்றிருக்கின்ருர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உரும்பிராய் அருணுசலம் சிவகுரு
— வழக்காளி

இல. 11405

எதிராக

கைதடி சின்னத்தம்பி முருகேசு
— எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 11405-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிககப்படும் ஏழு துண்டுக் காணிகள் 1955 ஆம் ஆவணி மீ 23 உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

1 வடயாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி கோவிற்பற்று கைதடி இறை வண்ணன்தேவன்வத்தைப் புலம் கி. பரப்பு 3 எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலாதனம் வடக்கு சின்னத்தம்பி பெண் பொன்னுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள், மேற்கு சின்னத்தம்பி இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். தெற்கு விசுவலிங்கம் பெண் குஞ்சிப்பிள்ளைக்குடைய ஆதனம் இதடங்கலும்.

2 ஷ இறை கூளாவடித் தோட்டமும் புலமும் 16 கி பரப்பு அளவின்படி 13 கி பரப்பும் 6 குழியும் எல்லை கிழக்கு மண்றோட்டு, வடக்கும் மேற்கும் காசியர் கணபதிப்பிள்ளையுடைய உரித்தாளருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள் தெற்கு வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளைக்குடைய ஆதனம் இதடங்கலும்.

3 ஷ இறை கற்கட்டுப்புலமும் தோட்டமும் கி பரப்பு 3 அளவின்படி 3 கி பரப்பும் 3 குழியும், எல்லை கிழக்குஒழுங்கை வடக்கு அகிலேசரினுரிமைககாரருக்குரிய ஆதனம், மேற்கு இராசையா பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு கதிரவேலு கந்தையாவும் பங்காளருக்குமுடைய ஆதனங்கள் இதடங்கலும்.

4 ஷ நாவற்குளி இறை கற்கட்டுப்புலம் கி பரப்பு 4 அளவின் படி 5 கி பரப்பும் 15 குழியும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கும் மேற்கும் கந்தர் சபாபதியின் ஆதனம், தெற்கு முடிக்குரிய நிலமும் குளமும். இதடங்கலும்.

5 ஷ கைதடி இறை குடு கொண்டான் புலம் கி பரப்பு 5-ம் எல்லை கிழக்கு அப்பாக்குட்டி சிதம்பரனதர் பெண் தங்கமுத்துவின் ஆதனம், வடக்கு வேலுப்பிள்ளை தம்புவின் ஆதனம், மேற்கு அருளையா சின்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சரவணமுத்து சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதிற் சொரியலாய் 1/4 பங்கு.

6 ஷ கைதடி இறை பூதம்பத்தை கி பரப்பு 4 ம் 15 3/4 குழியும் எல்லை கிழக்கு இராமசேதுக் குருக்களுக்கும் சோமாஸ்கந்தக்குருக்களுக்குமுடைய ஆதனங்கள் வடக்கு சின்னத்தம்பி வேலாயுதத்தின் ஆதனம் மேற்கு இளையதம்பி கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு ஈட்டுக்காரரின் ஆதனம். இதடங்கலும்.

7 ஷ மறவன்புலோ இறை சொக்கன்பனையடியும் மற பிரிவும் செ பரப்பு 39 5/3 ஆனல் ஆட்சிப்படி செ பரப்பு 40 1/2 யும் எல்லை கிழக்கு முருகேசர் சுப்பிரமணியத்தின உரித்தாளருக்குடைய ஆதனம் வடக்கு சங்கரப்பிள்ளை ஆனந்தத்துரைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். மேற்கு வை. சி. சி. குமாரசுவாமிக்குடைய ஆதனம், தெற்கு பொன்னம்பலம செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள் இதடங்கலும்.

இக்காணிகளைப்பற்றி ஏதாகுதல் விபரம் அறியவிரும்பினல் பிறகடர் உரும்பராய் அ. சுப்பிரமணியம் அவர்களிடம் அறியலாம்.

செ. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
8—7—55
M 82 15-7 (த 300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஞாபகார்த்தக் கூட்டம்

சைவப்பெரியார் ஸ்ரீமாந் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் சேவை நலன்களைப் பாராட்டி, அன்னாரின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் வருகிற ஆடி மீ 7 உ (23—7—55) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வியாவிற் சைவபரிபாலன வித்தியாலய ஆதரவில் மேற்படி வித்தியாலய மண்டபத்திலே குறித்த பெரியாரவர்களின் சிராத்த ஞாபகதின வைபவம் நடைபெறுமென அறிகிறோம்.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1942-ம் ஆண்டின் 13ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசன்ஸ் பெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K. K. S. ரோடு பெ. அரு. மு. முத்துச்சாமிசெட்டியார் அன்சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படிசட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம்பர் | உ மீ ஸு | கொடுத்தரூபா | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 13794 | 17-3-53 | 60 | கைலாசபிள்ளையார்கோவில் மேற்கு வீதி | இளையதம்பி வேலுப்பிள்ளை | பழுது சுஷாக்கூடு 1 |
| 13795 | ,, | 50 | திருநெல்வேலி தெற்கு | சின்னையா குணரெத்தினம் | பழுதுமாத்துவிட்ட விலாசம்போட்ட மோதிரம் 1 |
| 13869 | 21-3-53 | 43 | மானிப்பாய் வடக்கு | பொன்னையா அருமைத்துரை | தாலி1ம் குண்டு 1ம் திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி 2 |
| 14541 | 27-4-53 | 21 | மானிப்பாய்தெற்கு | காசிப்பிள்ளை ராசதுரை | இமி வெள்ளைக்கல் மோதிரம்1 |
| 14731 | 5 5-53 | 13 | தலையாளி | சரவணப்பெருமாள் பொன்னம்பலம் | இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 15079 | 20-5-53 | 25 | உரும்பராய்கிழக்கு | வேலுப்பிள்ளை அரியகுட்டி | பழுது இமிகல் அக்ஷாக்கூடு1 |
| 15383 | 3-6-53 | 6 | அனலதீவு | ஆறுமுகம் வயித்தியநாதர் | இமி வெ கல் காதுக்குச்சி சோடி 1 |
| 15627 | 15-6 53 | 31 | திருநெல்வேலிகிழக்கு | மயில்வாகனம் துரையப்பா | சில கல்லில்லாத இமிகல் கொண்டைப்பூ 1 |
| 15711 | 19 6-53 | 11 | கோண்டாவில்கிழக்கு | முத்தையா சபாரெத்தினம் | சில கல்லில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1 |
| 15790 | 22-6-53 | 18 | கன்னாதிட்டி | சுப்பிரமணியம் செல்லையா | இமி வெள்ளை சீலம் கட்டிய தொஙகட்டான் சோடி 1 |
| 15895 | 27-6 53 | 26 | கொழும்புத்துறை | W. J. ஸ்பென்சர் | பழுது விலாசம்போட்ட பொட்டு 1 |
| 15980 | 1-7-53 | 33 | இந்துகாலேஜ் ஒழுங்கை | வேலுப்பிள்ளை சண்முகம் | கம்பிக்காப்பு 1 |
| 16041 | 4-7-53 | 80 | நாவாந்துறை | மரியான் அந்தோனி | கிளாவர் மோதிரம் 1ம் இமி வெள்ளைக்கல் நீலம்கட்டிய மோதிரம் 2 |
| 16075 | 6-7-53 | 23 | மண்டதீவு | முத்து நடேசபிள்ளை | இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 16359 | 18-7-53 | 20 | இந்துகாலேஜ் | நாகமுத்து கணபதிப்பிள்ளை | பழுது முருக்குப் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 16407 | 20-7-53 | 35 | இணுவில் மேற்கு | சிதம்பரநாதர் பொன்னையா | திருகில்லாத இமிகல்தோடு சோடி 1 |
| 16425 | 21-7-53 | 7 | கச்சேரியடி மேற்கு | சின்னத்தம்பி சதாசிவம் | மோதிரம் 1 |
| 16497 | 25-7-53 | 10 | நாவாந்துறை தெற்கு | அந்தோனிமுத்து முத்தையா | இமி வெள்ளைக்கல் தொங்கட்டான் சோடி 1 |
| 16501 | ,, | 18 | சில்லாலை | சந்தியாப்பிள்ளை ஞானப்பிரகாசம் | இமி கல் தோடு சோடி 1 |
| 16532 | 27 7-53 | 58 | நாவாந்துறை | பொன்னர் கந்தையா | இமி வெள்ளை நீலம்கட்டிய புரூச் 1 |
| 16588 | 30-7-53 | 25 | கொக்குவில்கிழக்கு | வயித்திலிஙகம் குமாரு | இமி வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1 |
| 17383 | 8-9-53 | 11 | நாவலர் ரோடு | ராமானுஜம் ராமகிருஷ்ணன் | இமி கல் மோதிரம் 1 |
| 17470 | 13-9-53 | 50 | ஓட்டுமடம் | சின்னப்பு பொன்னையா | முருக்குப்பிள்ளைக்காப்பு சோடி 1ம் பஞ்சாயுதம் 1 |
| 17518 | 16-9-53 | 6 | கன்னாதிட்டி | செல்லையா இராசேந்திரன் | கட்டி 1 |
| 17534 | ,, | 25 | கன்னாதிட்டி | செல்லையா இராசேந்திரன் | கட்டி 1 |
| 17569 | 19-9-53 | 15 | கோப்பாய் தெற்கு | சந்தியா ஞானம் | காவடி இல்லாத பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 17824 | 6 10-53 | 45 | மண்கும்பான் | ஆறுமுகம் நாகராசா | திருகும் சில கல்லுமில்லாத இமி கல் தோடு சோடி 1 |
| 17826 | ,, | 20 | கஸ்தூரியார்ரோட் | கந்தையா ஐயம்பிள்ளை | தலி 1ம் குண்டு 2 |
| 18376 | 4-11-53 | 25 | ஆரியர்குளம் | நாகலிங்கம் நடராசா | தாலி 1 |
| 18409 | 5-11-53 | 10 | நாவாந்துறை தெற்கு | பிலிப்பு பிலேந்திரன் | சில கல்லில்லாத இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 18422 | ,, | 16 | நல்லூர் வடக்கு | சின்னப்பு அருணாசலம் | இமி கல் தோடு சோடி 1 |
| 18442 | 7-11-53 | 13 | கிளிநொச்சி | சி செ மரியாம்பிள்ளை | பழுது மோதிரம் 1 |
| 18633 | 14 11-53 | 20 | நாவலர் ரோட் | வேலாயுதம் மயில்வாகனம | சிகில் மோதிரம 1 |
| 18776 | 20-11-53 | 6 | சுவாலி வடக்கு | விசுவலிங்கம் கணேசு | வளையமிலலாத இமி வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுகுச்சி சோடி 1 |
| 18779 | 21-11-53 | 213 | சோனகதெரு | சுல்தான் சிக்கந்தர் | சுல்த்தான அப்துல்க்காதர் மட்டப்பொன் அல்கொத்து 31 |
| 18790 | ,, | 45 | இணுவில் கிழக்கு | வேலுப்பிள்ளை தருமலிங்கம் | இமி கல் தோடு சோடி 1 |
| 18800 | ,, | 21 | ஐயனார் கோவிலடி | ஐயாத்துரை தம்பிராசா | வெள்ளிக்கம்பியுடன் சில கல்லிலலாத இமி வெள்ளைக்கல் கொண்டைப்பூ 1 |

விற்பனவு மன்மத ஸு ஆடி மீ 14-ந் திகதி (30—7—55) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படியார் கடையில் எடுபட்ட நகைகள் பிறநீக்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

S. Pasupathy Chettiar

5—7—55 M.7 8,15-7 வெக்தீஸ் மேன்தர்

## உலக வியாபகம் ஒப்பற்ற இறை நிறைவாகும் தோற்றம்

4-ம் பக்கத்தொடர்ச்சி

ரிடம் முறையிட்டார். பிள்ளையார்க்குக் கருணை பிறந்தது. அப்பனைகளைமுன்னிட்டு நோக்கினர். அலைகளில்தங்கியிருந்த திரோதானம்திடீரென விலகிற்று உள்ளிருந்த தெய்வம் பிரகாசித்தது. அத்தெய்வ சக்தியால் எல்லாப் பனைகளும் குலைகளோடுவிளங்கின. ஆண்பனைகள்பெண்பனைகளாயின. என்று நாடெங்கும் புகழுயிற்று. பிள்ளையாரும் தம தேவாரப் பாடலில,

"குரும்பை ஆண்பனை ஈன் குலை ஒத்தூர்" என்றே சிறப்பித்துவிட்டார். ஆண்பனை குரும்பை ஈன்றமை அவ் ஒத்தூரின் விசேடமாயிற்று.

இன்னுமொன்று கேளுங்கள். திருநாவுக்கரசு சுவாமிகளைக் கொல்விப்பதற்கு ஒருநாள் ஒரு யானையை ஏவிவிட்டார்கள். அதுவும் பெரும படாடோபத்தோடு சுவாமிகளை நெருங்கிறது. கொன்றே விட்டதா? ஏன் கொல்லவில்லை? அவர் பார்வை பட்டவுடனே யானையிடம் இருந்த திரோதானம் விலகிற்று. அதன்பாலுள்ள தெய்வசக்தி பிரகாசித்து விட்டது. யானை ஞானியாயிற்று. அதன்மேல் தீங்கு செய்யுமியற்கை அதனிடத்தில எப்படி இருக்க முடியும். அவரை வலமாகச் சுற்றி வந்து வணங்கி எழுந்தது. "எண்டிசைபோர் களுங்காண இறைஞ்சி எழுந்தது வேழம்" ஏவிவிட்டவர்கள் எல்லாரும் பார்த்து மருண்டுபோய் விட்டார்கள்.

ஏன்? மாணிக்கவாசக சுவாமிகள் முன்னிலையில் ஊமைப்பெண் பேசினளல்லவா? உமாபதி சிவாசாரியார் பார்வையில் முள்ளிச் செடி முத்தி பெற்றதல்லவா! சுந்தரமூர்த்தி சுவாமிகள் சந்நிதியில், சிறுவனொருவனை விழுங்கிய முதலை அவனை உயிரோடு உமிழ்ந்து விடவில்லையா! இவையெல்லாம் மெய்ஞ்ஞானிகள் முன்னிலையில் அங்கங்கிருந்த திரோதானம் விலகித் தெய்வம் பிரகாசித்த அற்புதந்தானன்றி வேறில்லை.

நெருப்புக்கொள்ளி சேர்ந்தபோது பிராணவாயு தானப்ப பிரகாசிப்பது போல அனபர்கள் சேர்ந்தபோது இயற்கையிலுள்ள தெய்வம தானப்ப் பிரகாசிப்பது கண்டோம். நாங்களும் ஞானமார்க்கத்தைப் பின்பற்றனல் ஞானகள் ஆவோம். பக்தி மார்க்கத்தைப் பின்பற்றினல் பக்தாகள் ஆவோம். அப்போது எங்களுககும் இந்தநிலை வந்துவிடும். அதன்பின் "பார்ககுமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே" தெய்வம எனபதை நேரில் உணர்வோம். உணர்ந்து உணர்ந்து அநுபவிப்போம் அதனல் பேரின்பமுறுவோம்.

"முன்னிலே வந்தபிறவி ய எனக்குவாலிதாம் இன்பமாமு"

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று நாங்களும் வயார வாழ்த்துவோம்.

கடைசியாக இன்னுமொன்று சொல்லவா? கரி வாயுவின் தடையை நீக்கிப் பிராணவாயுவைப் பிரகாசிக்கச் செய்வதற்கு நாம் முயற்சி செய்யலாம; அதன் பலனையும் நேரே காணலாமல்லவா? அதுபோலத்தான் மறுவிஷயமும், உலக வியாபகத்திலே கலந்துள்ள திரோதானம மாயை ஆதியவற்றின மறைப்பை நீக்க நாம் முயற்சி செய்யவேண்டும். முயன்றால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். எங்கள் கோயிற்பூசை, வழிபாடு, பிரார்த்தனை, திருவிழாக்கள் எல்லாம அதே முயற்சிதான். இவற்றினல் இந்த மறைப்புச் சக்திகளெல்லாம் விலகிக்கொடுக்கத தெய்வம் உலகெலாம் பிரகாசிக்கும். எங்கள் உலகம் உண்மையில் தெய்வ லோகமே என விளங்கும்.

## இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி ஆடித் திருக்கல்யாண மஹோற்சவம் 13-7-55 30-7-55

ஷை ஆலயத்தில் நிகழும் ஆனி மாதம் 29-ம் திகதி (13-7-55) புதன்கிழமை ஆடி மகோற்சவம் ஆரம்பமாகி ஆடி அமாவாசைத் தினமான (19-7-55) செவ்வாய்க்கிழமை அதிகாலையில் ஸ்ரீ கோதண்டராம சுவாமி கருட வாகனத்தில எழுந்தருளி சேதுவில் தீர்த்தமாடுங் காட்சியும் மறுநாள் புதன்கிழமை இரவு மின்சார தீப அலங்காரத்துடன் திருஉலாக் காட்சியும் வழக்கமபோல் மிகவும் சிறப்பாக நடைபெறும். பின் (25-7-55) திங்கட்கிழமை ஸ்ரீ இராமநாத சுவாமிக்கும — பர்வதபததினி அம்மாளுக்கும் திருக்கல்யாண உற்சவம் நடந்து (30-7-55) சனிக்கிழமை உற்சவம் பூர்த்தியாகும். சிதம்பரம் கும்பாபிஷேகத்துக்குச் சென்றிருக்கும் சைவாபிமானிகள் இப்புராதன ஸ்தலத்துக்கும் இவ்வுற்சவகாலத்தில் சென்று சுவாமி தரிசனம்பண்ணி இஷ்டசித்திகளைப் பெற்று இன்புறலாம்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Jaffna on Friday July. 15 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org